**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

# OS. No.190/2022

| | | |
|---|---|---|
| சாட்சி | - | பி.வா.சா.2 |
| பெயர் | - | திருமதி.தீபா |
| கணவர் பெயர் | - | அறிவழகன் |
| முகவரி | - | பிஷப் டேவிட் நகர் வேலூர் |
| தொழில் | - | Staff Nurse |
| வயது | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.02.2026.**

**முதல் விசாரணை-**

1) நான் இந்த தாவாவில் பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் வாதி பிரதிவாதியின் மகள். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் பிரமாணமாய் கூறுப்பட்டவையாகும். அதை முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மேலும் தாவாவுடன் தாக்கல் செய்துள்ள பிரதிவாதியின் Pass Book, Statement பி.வா.சா.ஆ.56 ஆக குறியீடு செய்ய வேண்டுகிறேன். (பி.வா.சா.ஆ.56 எனது தாயார் வங்கி கணக்கு உண்டானது என்பதால் என் மூலம் குறியீடு செய்ய வாதி தரப்பில் கடுமையான ஆட்சேபனை எழுப்பப்பட்டது).

குறுக்கு விசாரணை-

தாவா சொத்திற்காக தான் எனது பெற்றோர் வழக்கு நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றால் சரி. தாவா சொத்தை என் அப்பா அவருக்கு சொந்தமானது என அறிவிக்க கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். 2ம் வழக்கு பரிகாரம் என் அப்பா அவர் வாங்கி கொடுத்த சொத்து என கோருகிறார். 3ம் வழக்கு பரிகாரம் என் அப்பா சொத்துக்கு உரிமை இல்லாமல் சொத்தை வாங்கி கொடுக்காமல் பரிகாரம் கோருகிறார். நான் காலை தான் குவைத்திலிருந்து வந்தேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலுள்ள விவரம் எனக்க எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் 1988 ல் சௌதி அரேபியாவுக்கு வேலைக்கு சென்றார். எனது தாயார் சௌதி அரேபியாவுக்கு Man Power வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலமாக வேலைக்கு சென்றார். சௌதி அரேபியாவிற்கு செல்வதற்கு முன்னால் என் அம்மா சி.எம்.சியில் ரூ.4500/- மாத சம்பளம் பெற்று வந்தார். சௌதி அரேபியாவிற்கு அந்த காலத்தில் என் அம்மா சி.எம்.சி சம்பளத்தை வைத்து சென்று இருக்க முடியாது என்றும் என் அப்பா என் அம்மாவிற்கு செலவு செய்து சௌதி அரேபியாவிற்கு வேலைக்கு அனுப்பினார் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது என் அம்மா BSc Chemistry படித்து முடித்திருந்தார். நான் 8ஆம் வகுப்பு என் தங்கை 5ம் வகுப்பு படிக்கும்போது என் அப்பா ஏலகிரி கான்வன்டில் சேர்த்தார் என்றால் என் அம்மா தான் சேர்த்தார். நானும் என் தங்கையும் ஏலகிரி கான்வன்டில் படித்தபோது பள்ளி விடுதி கட்டணத்தை மாதமாதம் என் அப்பா தான் செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல என் அம்மா தான் டிடி மூலும் பணத்தை

பள்ளிக்கு செலுத்துவார். அந்த சமயத்தில் பள்ளிக்கு டிடி என் அம்மா அனுப்ப முடியாது என்றும் நான் என் அம்மாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா தான் என்னுடைய திருமணத்தை செய்து வைத்தார் என்றால் சரியல்ல என்னுடைய திருமணம் காதல் திருமணம் நானாக செய்து கொண்டேன். எனக்கு முதல் திருமணம் விவாகரத்து ஆகிவிட்டது. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் பொய்யாக விவரங்களை கூறியுள்ளேன் என்றும் எனக்கு முதல் திருமணம் என் அப்பா சீர் வரிசை கொடுத்து சிறப்பாக செய்து வைத்தார் என்பதை மறைத்து நானாக திருமணம் செய்து கொண்டேன் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் எதற்காக எனது அம்மாவின்வங்கி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அம்மா ரூ.6,00,000/- பெண்ணாத்தூரிலுள்ள சின்னசாமி என்பவரிடம் என் அப்பா அடைமானம் வாங்கி அதற்கு நான் சாட்சியாக கையெழுத்து செய்த கடனை என் அம்மா வங்கி மூலமாக என் அப்பாவிற்க கடன் கொடுத்த சின்னசாமிக்கு திருப்பி செலுத்தினார். தாவாவிற்கும் நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.56 க்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் வழக்கை திசை திருப்புவதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சிறு வயதில் பண விவகாரங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கான முதிர்ச்சி கிடையாது என்றும் என் அம்மா சொல்லி கொடுத்து ஏற்பட்ட காழ்ப்புணர்சியினால் என் அப்பாவிற்கு எதிராக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவுடன் நான் வருடாந்திர சுற்றுளா செல்வேன் என்றும் அதற்கு போட்டோ ஆவணங்கள் என் அப்பாவிடம் உள்ளது என்றும் என் அப்பா எங்களை நல்லபடியாக பராமரித்து

வந்தார் என்றும் என் அம்மா சௌதி அரேபியாவிலிருந்து ஓய்வு பெற்று வரும் வரை நல்லபடியாக வளர்த்து வந்தார் என்றும் தற்போது என் தாயாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் நானும் என் அப்பாவும் சௌதி அரேபியாவிற்கு செலலும்போது டெல்லியில் எடுத்த புகைப்படம் என்றால் சரி அந்த புகைப்படம் வா.சா.ஆ.4 ஆகும். என் அம்மா ஓய்வு பெற்று வந்த பின்னர் தான் என் அப்பாவை பற்றி தவராக சொல்லி காழப்புணர்ச்சியை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் நான் என் அப்பாவிற்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறார். என் அப்பா வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறார் என எனது சத்தியப் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா வேறு திருமணம் செய்து கொண்டார் என்று பொய்யாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the February 25th 2026.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.25 20:07:13 +0600

Additional District Judge(FTC),
Vellore.